# .N vs HITLER

## DRAMA — IN TAMIL

BY

**Rao Bahadur P. SAMBANDAM,** B.A., B.L.

AUTHOR OF

The Two Sisters, Galava, The Eye of Love, The Curse of Urvasi, The Merchant of Vanipura, Fate and Love, Simhalanatha, Pushpavalli, Amaladitya, Magapathi, The Ideal Wife, Siruthondar, The Golden Fetters, True Love, The Bandit Chief, Bricks-Between, At any Cost, The fair Ghost, Brahmin *vs.* Non-Brahmin, Vijayarangam, As you Like it, Sati-Sulochana, Lord Buddha, The Tragedy of Silence, The Good Fairy, Geetha Manjari, The True Brother, Malavikagnimitra, Chandrahari, The Demon Land, Sabapathy Part I, The Pongal Feast or Sabapathy Part II, A earsal or Sabapathy Part III, Sabapathy Part IV, Mixture, ssed in a Wife, The Dancing Girl, Subadra Arjuna, Karna e Giver, Sahadeva's Stratagem, The Surgeon General's rescription, Vichu's Wife, Sakuntala, Vikramorvasi, The Point f View, The Two Selves, The Tragic Denouement, The Sub Assistant Magistrate of Sultanpet, Harischandra, Blind Ambition, Markandeya, Sarangadhara, Manohara, The Two Friends, The Knavery of Kalappa, As We Sow-So We Reap, Over Forty Years Before the Footlights Parts I, II, III, IV, V, & VI, The Search, Prince Koneri, The Crowd in the Shandy, Ratnavali, The Gypsy Girl, Vaikunta Vaithiyar, Dikshithar Stories, Funny Stories, The Good Sister, Short Stories, Hints to Actors, The Tamil Drama, Humorous Essays, A hand book for Tamil Talkies, Stray Flowers, The Wedding of Valli, Talkie Experiences, The dead revived, Asthanapura Dramatic Company, Music-Mad, Nine Playlets, Sabapathi-Zamindar, Siva Shrines in India and Beyond Parts I & II, Siva Temple Architecture, Domestication of Damoo, Deepavali Gift, Sati-Sakti, etc., in Tamil; and Harischandra and Yayathi in English.

**FIRST EDITION**

PRINTED AT THE RATNA VILASAM PRESS,
37, ERULAPPAN STREET, SOWCARPET, G. T., MADRAS.

*All rights Reserved*] 1947 [*Price A*

# இந்தியனும்-ஹிட்லரும்

## ஓர் தமிழ் நாடகம்

நாடகப்பேராசிரியர்

**ராவ் பஹதூர் ப. சம்பந்த முதலியார்**, பி.ஏ., பி.எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

**இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :**

லீலாவதி—சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப் பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனா, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தம பத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றும் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப் அஸிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் — ஆறு பாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணீபுர வணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தைமிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி? ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக்காக்ஷி, விடுதிப்புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுரம் நாடகச் சபை, சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீன்தார், சிவாலயங்கள்-இந்தியாவிலும் அப்பாலும், சிவாலய சிற்பங்கள், மனையாட்சி, தீபாவளி வரிசை, முதலியன.

முதற் பதிப்பு

காபிரைட்] 1947 [விலை /-௧௨

INSCRIBED

TO

THE BELOVED MEMORY

OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

MY FRIEND

C. RANGAVADIVELU

# இந்தியனும் - ஹிட்லரும்

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| **விஸ்வநாதன்** | .... | *கதா நாயகன்.* |
| **அகத்தீஸ்வர முதலியார்** | .... | *அவன் தந்தை.* |
| **அம்மணி அம்மாள்** | .... | *அவன் தாயார்.* |
| **பத்மா** .... | .... | *அவன் மனைவி.* |
| **கண்ணன்** .... | .... | *அவன் குழந்தை.* |
| **வென்ட்வொர்த்** | .... | *விஸ்வநாதத்தின் அமெரிக்க சிநேகிதர்.* |
| **ஹிட்லர்** .... | .... | *ஜெர்மன் ஏகாதிபத்ய தலைவன்.* |
| **ஹிம்லர்** .... | .... | *ஹிட்லரின் தலைமை உத்யோகஸ்தன்.* |
| **ஹெர்மன்** .... | .... | *ஒரு ஜெர்மன் ரகசிய போலீஸ் உத்யோகஸ்தன்.* |
| **சுகன்மல்** .... | .... | *ஒரு சௌகார்.* |
| **கில்லிங்காம்** .... | .... | *இங்கிலீஷ்காரன் வேடம் பூண்ட, ஓர் ஜெர்மன் படைவீரன்.* |

*விஸ்வநாதனுடைய வேலையாள், மாறுவேடம் பூண்ட ஜெர்மன் போலீஸ் உத்யோகஸ்தர்கள், ஜெர்மன் படை உத்யோகஸ்தர்கள், ஜெர்மன் துருப்புகள், அமெரிக்கன் துருப்புகள் முதலியோர்.*

**நாடகம் நடக்கும் இடம்**—*திருவொற்றியூரில் விஸ்வநாதத்தின் வீட்டிலும், பிறகு சமுத்திரத்தில் ஒரு ஜெர்மன் கடல் மூழ்கிக் கப்பலிலும்.*

**காலம்—1942.**

# இந்தியனும் - ஹிட்லரும்

## முதல் அங்கம்

### முதல் காட்சி

இடம்—திரு ஒற்றியூர்க் கடற்கரை யோரம்.

காலம்—விடியுமுன்.

புதிதாய்க் கட்டப்பட்ட பல சாமான்கள் நிறைந்த ஓர் வீட்டின் அறை. இதன் ஒரு புறம் பலவிதமான புதிய ரசாயன யந்திரங்கள் நிறைந்திருக்கின்றன. அறையின் மத்தியில் ஒரு மேஜையைச் சுற்றி மூன்று நான்கு நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன. ரசாயன யந்திரங்களுக் கெதிரில் இருக்கும் மற்றொரு சிறு மேஜையின் முன், கையில் ஒரு ரசாயனக் குழலுடன், விஸ்வநாதன் நின்று கொண்டிருக்கிறான். அறையின் மற்றொரு பக்கமுள்ள பலகணி ஒரு திரையால் மூடப்பட்டிருக்கிறது.

வி. உம்! (கையிலிருக்கும் குழலைக் கலக்கிப் பார்த்து) இன்றைத்தினம் இதன் சூட்சுமத்தைக் கண்டு பிடிப்பேன் என்று, எனக்குள் ஏதோ சொல்கிறது! இந்த இரகசியத்தை மாத்திரம் நான் கண்டு பிடிப்பேனாயின், இந்த பாழாய்ப்போன யுத்தத்தை, அடியோடு உலகினின்றே ஒழித்து விடுவேன்!

(கதவைத் தட்டுகிற சப்தம்)

வி. ஆ! மறுபடியும் கதவைத் தட்டுகிறார்கள்!—இந்த ஒரு இரவாவது என்னைத் தொந்திரவு செய்யாமல் விடமாட்டார்களா? (பூட்டப்பட்டிருக்கும் கதவருகில் போய்) இப்பொழுது யார் தட்டுகிறது?

(வெளியிலிருந்து வேலைக்காரியின் குரல்—கொஞ்சம் காபியாவது சாப்பிடுகிறீர்களா என்று அம்மா கேட்கச் சொன்னார்கள்)

வி. ஓ! நான் ராத்திரி போஜனம் கொண்டேனு?—(பலகணி யருகில்போய் அதை மூடியிருக்கும் திரையைத் தள்ளிப்பார்த்து)—ஓ! பொழுது விடிந்து விட்டதா!—ஹூம்! காபியைக் கொஞ்சம் பொறுத்து அனுப்பச் சொல்—இப்பொழுது அவசரமில்லை. கொஞ்ச நேரம் வரையில் என்னை ஒருவரும் தொந்திரவு செய்ய வேண்டாம். (மேஜையருகில்போய் அந்த ரசாயனக் குழாயில் ஏதோ திராவகத்தை விட்டுப் பரிசோதிக்கிறன்.

(கதவண்டை சிறு கையால் தட்டுகிற மெல்லிய சப்தம்)

வி. பாழாய்ப்போக!—நான் கதவைத் திறக்கமாட்டேன்—இந்தப் பரீட்சையில் நான் ஜெயமடையும் காலம் சமீபிக்கும்போது—

(கதவு பக்கமிருந்து ஒரு குழந்தையின் அழுகுரல்)

வி. என்ன அது?—என் பையனு அழுகிறன்! ஏன் அழுகிறன் அவன்? (கதவைத் திறந்து பார்த்து) என்ன சமாசாரம் கண்ணு?—ஏன் அழுகிறய் நீ?

க. என் புஸ்தகம் வாங்க அம்மா ரூபா கொடுக்கமாட்டேன் இண்ராங்க (அழுகிறன்) அவுங்ககிட்ட புஸ்தகம் வாங்க பணமில்லையாம்—

வி. கண்ணு—அழாதே கண்ணு — உனக்கு சீக்கிரம் ரெண்டு புஸ்தகம் வாங்கப் பணம் தருகிறேன். என் கண்ணல்ல போ—இப்பொழுது என்னைத் தொந்திரவு செய்யாதே! (கண்ணன் போய்விடுகிறன்).

இந்தப் பணம் பாழாய்ப்போக! இந்த பணம் என்பதை இந்த உலகில் ஏன் உற்பத்தி செய்தார்கள்! (ரசாயனப் பரீட்சையை நடத்துகிறன்.)

(வெளியில் கதவைத் தட்டுகிற உரத்த சப்தம்)

(வெளியிலிருந்து) தபால் சார்!

வி. போ வெளியே! ஒரு கடிதமும் வேண்டாம். இன்றைக்கு என்னை தொந்திரவு செய்ய!

(தபால்காரன் வெளியிலிருந்து) தந்திசார்!

வி. அதைக் கொளுத்தி விடு!—அல்லது, என் மனைவியிடம் அதைக் கொடுத்து விட்டு, போ வெளியே உடனே!—இல்லாவிட்டால் நான் வந்து உன்னை உதைத்துத் துரத்துவேன்! (ரசாயனப் பரீட்சையை நடத்துகிறான்) என்னையேன் தொந்திரவு செய்யாமல் இருக்க மாட்டேன் என்கிறார்கள்? இந்த தனியான இடத்தில் கூட? இன்னொருமுறை யாராவது கதவைத் தட்டி என்னைத் தொந்திரவு செய்தால், அப்படியே சுட்டு விடுகிறேன்!—பாத ரசத்தை விட்டுப் பார்க்கிறேன் என்னுகிறதென்று.—(அப்படியே செய்கிறான்)—ஆ! இது கொஞ்சம் சுமார்! கொஞ்சம் சுமார்!

(வெளியிலிருந்து ஒரு குரல்—ஒரு நிமிஷம் நான் வரலாமோ உள்ளே?)

வி. தீர்ந்தது! அது என் மனைவியின் குரல்! என்ன கண்ணு வேணு முனக்கு? இன்றைக்கு மாத்திரம் என்னைத் தொந்திரவு செய்யாமல் விடமாட்டாயா? நான் நிரம்ப வேலையா யிருக்கிறேன் என்று உனக்கும் தெரியவில்லையா?

(பெண் குரல்—ஒரே ஒரு நிமிஷம்)

வி. (கதவைத் திறந்து) ஒரே ஒரு நிமிஷம்!—வா உள்ளே.

பத்மா, ஒரு கையில் காபி கோப்பையுடனும், மற்றொரு கையில் ஒரு தந்தியுடனும் வருகிறாள்.

ப. கொஞ்சம் காபியாவது சாப்பிடுங்களேன்! நேற்று மாலை முதல் நீங்கள் ஒன்றுமே சாப்பிடவில்லையே.

வி. ஆமாம் என்றால்! வாஸ்தவம் தான்! — எனக்கும் கொஞ்சம் பலஹீனமாய்த்தான் இருக்கிறது. இதோ —அந்த காபியைக் கொடு இப்படி. (அதை எடுத்து குடித்து விட்டு) நிரம்ப நன்றாயிருக்கிறது! யார் செய்தது?

ப. நான் தான்.

வி. ஆ! நீ நல்ல பெண்ணாச்சுதே—இன்னும் ஒரு மணி சாவகாசம் என்னைத் தனியா யிருக்க விடு.

ப. நான் வந்தது இன்றைக்கு—உங்கள் கலியாணமான —வெற்றி விழா—என்று ஞாபகப்படுத்த—

வி. ஓ! அதை நான் முற்றிலும் மறந்தேன்! உன் கலியாணமான வெள்ளிவிழா தினம் வரும்பொழுது எனக்கு ஞாபக படுத்து—உனக்கு நல்ல பிரெசன்ட் (Present) வாங்கித் தருகிறேன்—இப்பொழுது போ வெளியே—என் கண்ணல்ல. (மேஜையருகில் போகிறான்)

ப. (போகும் போது) தபால்காரன் இந்த தந்தியைக் கொடுத்துவிட்டுப் போனான்.

வி. அதைக் கொண்டுபோய் குப்பையில் போடு!—அல்லது அந்த மேஜையின் பேரில் போட்டுவிட்டுப் போ! (பத்மா போகிறாள்).

வி. அந்த காபியைக் குடித்தது எனக்குள் ஒரு புது யோசனையைப் பிறப்பித்திருக்கிறது—இதை யேன் நான் முன்பே யோசிக்கவில்லை? (கருப்பான கோலி குண்டைப் போன்ற ஒரு வஸ்துவை ஒரு குப்பியில் போட்டு அதன் பேரில் ஒரு திராவகத்தை ஊற்றுகிறான்) இது வற்றிப் போவதற்கு இருபது விநாடி பிடிக்கும் குறைந்த பட்சம், இதற்குள் குண்டுதான் வேண்டிய தூரம் போகும். (வெளியில் கதவைத் தட்டுகிற சப்தம்)

வி. அதோ பார்! நான் கதவைத் திறக்க மாட்டேன்! வருவது வரட்டும்!

(வெளியில் பலமாய்க் கதவைத் தட்டுகிற சப்தம்)

(வெளியிலிருந்து குரல்) டாக்டர் சார்! டாக்டர் சார்!

வி. பிசாசை நாம் நினைக்காவிட்டாலும் அது வந்து சேர்கிறது!—ஹும்! (கதவைத் திறக்கிறான்)

சுகன்மல் சவுகார் வருகிறான்.

சு. குட் ஈவ்னிங்! ஆ! குட் மார்னிங்! முதலியார் சார்.

வி. ஆம்—குட் மார்னிங்! ஏதாவது விசேஷ மூண்டோ? இதோ பாருங்கள், நான் இப்பொழுது—

சு. ஒண்ணும் விசேஷமில்லெ — உங்களே பாத்தூட்டு போகலாமிண்ணு வந்தேன்.

வி. இப்பொழுது, என்னைத்தான் பார்த்தாச்சுதே! போய் வரலாமே? இப்பொழுது நான் நிரம்ப வேலையா யிருக்கிறேன்.

சு. நீங்க — இண்ணைக்கி — எல்லா வட்டியும் கொடுக்கரே னிண்ணு சொன்னேங்களே?

வி. ஓ! அதுவா?—தெரிகிறது—சாவுகார்ஜி, நான் சொல் வதைக் கேளுங்கள். நான் சொன்னபடி இன்றைக்கு என்னால் கொடுக்க முடியாது—இப்படி தவறிப்போன தற்காக, வருகிற மாசம் முதல் தேதி இரட்டிப்பு வட்டி சேர்த்து கொடுக்கிறேன்.—ஒரு வேளை அசல் முழுவ தையும் சேர்த்துக்கொடுத்தாலும் கொடுத்துவிடுவேன்.

சு. எப்படி—முதலியார் சார்?

வி. அது ஒரு ரகசியம்! அதை இப்பொழுது உங்களுக்குச் சொல்ல முடியாது.—அன்றியும் அந்த பிரிவிகவுன் சில் தீர்மானம் சீக்கிரம் வருமென்று நினைக்கிறேன்.

சு. பிரிவி—அப்பீல்—பணலா போச்சி முதலியார் சார்! தந்தி வந்தது—அத்தொட்டு தான் உங்களே பாக்க வந்தேன்.

வி. ஓ!—(மேஜையின்மீதிருந்த தந்தியை விரைவில் பிரித் துப் பார்க்கிறார்) ஓ! அப்படியா சமாசாரம்?

சு. முதலியார் சார்! நான் ஒரு விஷம் (விஷயம்) சொல் ரேன்—நீங்க என்னமோ புதுசா கண்டு பிடிக்கரைங் களாம்.—

வி. கண்டு—பிடிக்கிறேன்!

சு. ஆமாம்—நீங்க கண்டு பிடிக்கிறத்தே எனக்கு கொடுத் தூடுங்க—வித்தூடுங்க—நானு உங்க கடனெயெல்லாம் ரத்து—கான்சல் (Cancel) பண்ணிஉடரேன்! அத் தோடெகூட ஒரு லாக்! லச்சம் ரூபா கொடுக்கரேன்!

வி. என்ன ஆச்சரியம்! நான் என்ன கண்டு பிடிக்கப் போகிறேன்? இதைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?

சு. எனக்கு ஒண்ணும்—தெரியாது சார்! ஆனல் அதுக்கு ரெண்டு லச்சம் ரூபாய்க்கி ஒரு ஆபர் (Offer) இருக்குதுங்க—ஒரு லட்சம் உங்களுக்கு கொடுத்துடரேன். ஒரு லச்சம் நீங்க கொடுக்ணும் கடனுக்கு — எடுத்துக்ரேன் சார்—எல்லாம் சரி பூடுது.

வி. 'சரி பூடு'து சரிதான்! நான் கண்டு பிடிக்கப் போகிறது இன்னது என்று அறியாமல் அதற்காக இரண்டு லட்சம் ரூபாய் கொடுக்கிறேன் எனும் புத்திசாலி யார் அவன்?

சு. ஒரு—ஜப்பான்—மன்ஷன்!

வி. ஒரு ஜபானியனு!—ஓ! இது உதவாது! ஏதோ தவறு நடந்திருக்கிறது! இதனுண்மையை நான் அறிய வேண்டும்!—யார் இந்த ஜப்பான் மனுஷன்?

சு. பட்ணத்துலே—பட்டுவிக்கரான் சார்.—தெருவுலே.

வி. அவன்—இரண்டு லட்சம் ரூபாய் கொடுக்கிறதாகச் சொல்கிருன்!

சு. பொயில்லா சார்—பொன் கொடுக்கரேன் இன்ரான்—பொன் மார்க்சா!

வி. பொன்! மார்க்ஸ்!—இதை நான் உடனே நன்ருய் ஆருய்ந்தறிய வேண்டும்! இதைப்பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரியாதென்று நான் இருந்தால்!—சரி சரி! நான் காலஹரணம் செய்யக்கூடாது—சாவுகார், நான் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் ஜப்பான் மனிதனிடம, என் பிரயத்னம் ஒன்றும் பலிக்கவில்லை—எல்லாம் கெட்டுப் போய்விட்டது, என்று சொல்லுங்கள்—இப்பொழுது நீங்கள் உடனே விடைபெற்றுக் கொண்டு போங்கள், எனக்கு நிரம்ப வேலை யிருக்கிறது.

சு. சரிதான்—முதலியார் சார்—நான் போரேன்—ஆம். நான் சொல்ரத்தே கொஞ்சம் கேளுங்கள்—இன்னம் கூட ஒரு லச்சம் தர்ரேன்—மொத்தம் மூனு லட்சம்!

வி. நீங்கள் இப்பொழுது வெளியே போகிறீர்களா? அல்லது நான் உங்களை பிடித்து வெளியில் தள்ளட்டுமா?

சு. கோவம்—வேணும்சார்!—கடசி ஆபர் (Offer) நாலு லச்சம்!

வி. (அவனைப் பிடித்து) போங்கள் வெளியே!

சு. இல்லாப் போனு—நானு பத்ரம் மேலே — சம்மன் பண்ணரே!

வி. பண்ணிக்கொள், போ ஒழிந்து யமனே! (அவனை வெளியில் தள்ளிக் கதவைத் தாளிடுகிறான்.) இந்த ஜபானியனுக்கு நான் செய்யும் பிரயத்னம் எப்படி தெரிந்தது?— நாலு லட்சம் வரையில் கொடுக்கிறானு! இதெல்லாம் உதவாது! — அமெரிக்காவிலிருக்கும் எனது நண்பருக்கன்றி வேறு யாருக்கும் இந்த ரகசியம் தெரியாதென்று நினைத்திருந்தேன்! இது எப்படி வெளியாகிய தென்று உடனே நான் கண்டுபிடிக்க வேண்டும்!—பொன் மார்க்ஸ் கொடுக்கிறானு! ஜெர்மானியர்களுக்குக்கூட இது தெரிந்துவிட்டதா என்ன! சரி! முதலில் இந்த சூட்சுமத்தை நான் கண்டு பிடித்தாகட்டும். (மேஜையருகில் போய், காஸ் (Gas) விளக்கினுல் குப்பியைச் சூடாக்கிப் பார்க்கிறான்) இன்னும் அந்த திராவகத்தின் வேகம் போகவில்லை!—இதை மாத்திரம் நான் நிறுத்துவேனுயின்!

(வெளியில் மெல்ல கதவைத் தட்டுகிற சப்தம்)

வி. ஹா! இந்த இழவிற்கு நான் என்ன செய்கிறது?— இன்னொருமுறை இந்தக் கதவைத் தட்டுகிற சப்தத்தைக் கேட்டால் சாவியின் துவாரத்தின் வழியாக நான் சுடுகின்றேன்—வெளியில் யாரா யிருந்த போதிலும்! (தன் கைத் துப்பாக்கியை அந்த துவாரத்தில் நுழைக்கிறான்)

(அகத்தீஸ்வர முதலியார்—வெளியிலிருந்து — வேண்டாம் அப்பா! விஸ்வம்! நாங்கள் வெளியில் இருக்கிறோம்)

வி. ஓ! (கைத் துப்பாக்கி கையிலிருந்து கீழே விழுகிறது) (கதவைத் திறந்து) அப்பா! அம்மா! மன்னியுங்கள் என்னை! சந்தோஷம்! நான் உங்களைச் சுடாதது தெய்வாதீனம்!

(அவர்கள் உள்ளே வருகிறார்கள்)

அ. அதைவிட எங்களுக்கு அதிக சந்தோஷம், இப்பொழுதாவது தெய்வம் ஒன்று உண்டென்று நினைக்கிறாயே என்று.

வி. அடடா! அகஸ்மாத்தாய் அந்த வார்த்தை என் வாயிலிருந்து வந்தது.

(அம்மணி அம்மாள்) இருக்கட்டும், இனி அந்த எண்ணம் உன் மனதை விட்டு என்றும் அகலாதிருக்குமாக!

வி. இதோ பாருங்கள் அம்மா—

அ. சரி—இதைப்பற்றி இனி நாம் வாதாட வேண்டாம்.—அதிருக்கட்டும் — அப்பா, இந்த இரண்டு மூன்று நாட்களாக இங்கு என்ன செய்துகொண்டிருக்கிறாய்? ஊண் உறக்கமில்லாமல்?

வி. அப்பா—அது ஒரு ரகசியம்—நான் கூறுவதைத் தவறாக எண்ணாதீர்கள் — உங்களுக்கு அதைப்பற்றி அப்புறம் சொல்கிறேன்—சமயம் வந்தவுடன்.

அ. ஆயினும்—இது மற்றவர்களுக்குத் தெரியும்போலிருக்கிறதே—அந்த சாவுகார் என்னமோ உளறிக்கொண்டிருந்தானே எங்களிடம், என்ன அது?

வி. அவன் என்ன சொன்னான் உங்களிடம்?

அ. அவன் சொன்ன வார்த்தைகளை அப்படியே சொல்கிறேன்—கோபித்துக் கொள்ளாதே!—நீ ஒரு மடயன், நீ கண்டுபிடித்ததை நான்கு லட்சம் பொன் நாணயங்களுக்கு விற்கத் தெரியா மூடன், என்றான்.

வி. அப்பா, என்னை மன்னிக்கவேண்டும் நீங்கள்—எப்பொழுதாவது இதை நான் உங்களிடம் சொல்லித்தான்

தீர வேண்டும். நான் இந்த இரகசியத்தை முற்றிலும் பூர்த்தியாய்க் கண்டு பிடித்த பிறகு சொல்லலா மென்று நினைத்தேன். ஏறக்குறைய முற்றிலும் கண்டு பிடித்து விட்டேன். கொஞ்சம்தான் பாக்கியா யிருக்கிறது, அதையும் நான் கண்டு பிடித்து விட்டால் இது இந்த நூற்றாண்டில் கண்டு பிடிக்கப்பட்ட பல ஆச்சரியகரமான விஷயங்களுக்கெல்லாம் மேம்பட்ட தாகும்.

அ. எனக்கொன்றும் அவசரமில்லை. நான் பொறுக் கின்றேன்.

வி. வேண்டாம் அப்பா — இப்பொழுதே சொல்லிவிடு கிறேன். இந்த உலகத்திலே இன்னும் ஒரு மனுத னுக்குத்தான் இதைத் தெரிவித்திருக்கிறேன்—ஒரு அமெரிக்கவாசியான எனது நண்பர் — அவரைப் போல் நீங்களும் இதை இரகசியமாக வைத்திருப்பீர் கள் என்று எனக்குத் தெரியும்—நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கும் வரையில்,

அ. அப்படியே ஆகட்டும் என்று உனக்கு நான் பதில் சொல்ல வேண்டியதில்லை.

வி. நீங்கள் இந்த இரகசியத்தை வெளியிடுவீர்கள் என் னும் பயத்தினாலல்ல இப்படி நான் கேட்பது. பல முறை இந்த இரகசியத்தை முற்றிலும் கண்டு பிடித்து விட்டேன் என்று நம்பி, மோசம் போயிருக்கிறேன்.— ஆகவே பூர்த்தியாவதற்குள் இதை வெளியிட்டு, பலர் நகைக்க நான் ஆளாகக்கூடா தென்பதுதான் என் அபிப்பிராயம்.

அ. என்ன அப்பா, கண்மணி, அது ?

வி. இதுதான் அப்பா அது—அம்மா, இரண்டு வருடங் களுக்கு முன்பாக என்னை ராமாயணம் மஹா பாரதம் இரண்டு புஸ்தகங்களையும் படிக்கச் செய்தீர்கள் அல்லவா ? மஹா பாரதத்தில் ஒரு கதை யிருக்கிறது, அதில் அர்ஜுனன் எய்த மோஹனாஸ்திரம் என்னும் பாணத்தினால் கௌரவ சேனை முழுவதும், ஒரு சமயம், 3½ நாழிகை வரையில் பிரக்ஞையற் றிருந்ததாகக்

கூறப்பட்டிருந்தது. இதை நான் படித்தபோது இதெல்லாம் வியாசருடைய கற்பனையாயிராது, இதில் ஏதோ வாஸ்தவம் இருக்கவேண்டுமென்று எண்ணின வனாய், இதைப்பற்றி ஆராய்ச்சி செய்தபோது, தஞ்சா வூர் சரபோஜி ராஜாவின் சரஸ்வதி மஹால் புத்தக சாலையில் ஓர் பழைய ஏட்டுச் சுவடியில் இதைப்பற்றி கூறி யிருப்பதைக் கண்டறிந்தேன். அதை மிகவும் கஷ்டப்பட்டு படித்தபோது, இதன் இரகசியத்தை யறிந்தேன்.

அ. உம்—தெரிகிறது.

வி. கவர்ன்மெண்ட் உத்யோகத்திலிருந்து நான் விடுவித் துக்கொண்டதுமுதல் இதைப்பற்றி ஆராய்ச்சிசெய்து வந்தேன். இப்பொழுது ஏறக்குறைய இந்த இரகசி யத்தை முற்றிலும் கண்டு பிடித்துவிட்டேன் என்றே சொல்லலாம். இதைப் பூரணமாய் முடிக்க ஒரு சிறு விஷயம்தான் பாக்கி யிருக்கிறது.

அ. அது என்ன அது ?

வி. இந்தக் கண்ணாடிக் குழாயில் ஒரு சிறு குண்டு இருக் கிறது தெரிகிறதா ? அதனுள், ஐந்து மைல் விஸ்தீர ணத்திற்குள் இருப்பவர்களை யெல்லாம் கொஞ்ச காலம் மெய்ம்மறந்து போகும்படிச் செய்யவல்ல சக்தி அடங்கி யிருக்கிறது. இதில் கஷ்ட மென்னவென் றால், ஒரு பீரங்கியிலோ, பெரிய துப்பாக்கியிலோ இதை வைத்துச் சுட்டால், அந்த குண்டு ஐந்து மைல் போகும் வரையில், அது உடையாமலிருக்க வேண்டு மென்பதே — அதைத்தான் இப்பொழுது கடைசி யாகக் கண்டு பிடிக்க முயன்று வருகிறேன்.

அ. அதைக் கண்டு பிடித்தபின்—இதை எப்படி உபயோ கிக்கப் போகிறாய் ? இந்த உள் இரகசியத்தை ?

வி. ஏன் ? உங்களுக்குத் தெரியவில்லையா ? உலக முழுவ தையும் ஒரே யுத்தகள மாக்கிவரும் இந்தக் கொடிய யுத்தத்தை, இது நிறுத்தி விடாதா ?

அ. அல்லது, இந்த உலக முழுவதையுமே, அழித்துவிடக் கூடுமல்லவா ?

வி. அப்பா, நீங்கள் சொல்வது எனக்கு அர்த்தமாக வில்லை.

அ. கண்ணே, நான் சொல்வதைக் கேள். இத்தனை நூற்றூண்டுகளாகக் கண்டு பிடிக்கப்பட்டுவரும் ஒவ்வொரு விஞ்ஞான ரகசியமும், யுத்தத்தை, மிகவும் பயங்கரமாகவும், கொடூரமாகவும், உலகத்தைப் பாழாக்குவதற்காகவும், உபயோகிக்கப்பட்டேவருகிறது! இவைகளெல்லாம் யுத்தத்தைத் தடுக்க கொஞ்சமாவது மனிதனால் உபயோகிக்கப்பட்டு வருகிறதா? கொஞ்சமேனும் உன்னுடைய இரகசியமானது, உலகத்திற்கு வெளியிடப்பட்டால் ஒவ்வொரு தேசத்தாரும் மற்றவர்களையெல்லாம் அழிக்கவே பார்ப்பார்கள்: எல்லா தேசத்தாரும் ஒருவரையொருவர் அழித்துக்கொண்டு, பாரதத்தில் யாதவர்கள் கடற்கரையோரம் மடிந்ததுபோல் மடியவேண்டியதுதான்!

அ-அ. ஐயோ! என்ன கோரம்!

வி. அம்மா, இதன்பலன் இப்படி யொன்றிருக்கக்கூடும் என்று-நான் யோசிக்கவில்லை.

அ. கண்ணே, நான் உன்னை ஒன்று வேண்டிக்கொள்கிறேன், அதன்படி செய்கிருயா?

வி. நீங்கள் வேண்டுவதாவது?—கட்டளை யிடுங்கள்-அதன்படி செய்கிறேன்.

அ. இல்லை! உன்னிடமிருந்து அதை ஓர் வரமாக வேண்டுகிறேன்—அகில ஜீவராசிகளின் சம்ரட்சணைக்காக! கடவுளின் கிருபையால் இந்த கடைசி ரகசியத்தையும் கண்டு பிடிப்பாயாயின், என் அனுமதியின்றி வேறொருவருக்கும் இதை வெளியிடுவதில்லை என்று, எனக்குப் பிரமாணம் செய்து தருகிருயா?

வி. ஆகட்டும் அப்பா.

அ. அப்படியே செய்வதாக எங்களிருவர் பேரிலும்—பிரமாணம் செய்.

வி. அப்பா, தெரிகிறது—உங்கள் இருவர் பேரிலும் பிரமாணம் செய்கிறேன்—அப்படியே ஆகட்டும்.

அ. கண்ணே! கருணையே வடிவான கடவுள் உனக்கு உதவுவாராக! நமது தேசத்திற்கு முன்னோர்களான ரிஷீஸ்வரர்களுடைய தவப்பயனால், உனது இரகசியத்தைப் பூர்த்தி செய்யவேண்டிய புத்தி உனக்குக் கிட்டுமாக விரைவில்!

வி. நமது முன்னோர்களுக்கு விசாலமான புத்திகூர்மையிருந்த போதிலும், அவர்களிடம் இந்த குறை ஒன்றிருந்தது, தாங்கள் கண்ட பெரிய ரகசியங்களையெல்லாம் மனிதவர்க்கம் அனைத்தும் க்ஷேமத்தையடைய உபயோகப்படும்படி வெளியிடாதிருந்தனர்.

அ. மனித வர்க்கம் க்ஷேமத்தை யடையும்படியே அந்த இரகசியங்களை அவர்கள் பலருக்குக் கூறு திருந்தார்களோ என்னவோ? — யார் அறிவார்?

அ-அ. பரமேஸ்வரன் உன் மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்வாராக!—நாங்கள் விடைபெற்றுக் கொள்கிறோம்—எதற்கும் ஈஸ்வரனை நம்பு! (இருவரும் போகிறார்கள்)

வி. ஈஸ்வரனை நம்பு!—அதுதான் கஷ்டமா யிருக்கிறது.—நான் தேடுவதை எனக்குக் கொடுப்பாராயின் இப்பொழுது!—அவரை நம்புகிறேன்! (சிரித்துக்கொண்டே, ரசாயனப் பரீட்சை மேஜையருகில் போகிறான். குப்பியைப் பார்க்கிறான்)—ஓ! ஆச்சரியத்திலும் ஆச்சர்யம்! என் கடைசி பரீட்சை பலித்தது! ஜெயம்! நான் நாடியதைக் கண்டு பிடித்துவிட்டேன்! தெய்வாதீனமாய்! ஈஸ்வரன் ஒருவர் இருக்கிறார் என்று நான் நம்ப வேண்டியது தான். அமெரிக்காவிலுள்ள என் சிநேகிதருக்கு இதை முதலில் சொல்வதாக வாக்களித்தேன்—பிறகு என் தந்தை தாயர்க்குச் சொல்கிறேன். (அருகிலிருக்கும் ஓர் ஒலிபெருக்கியைப் போலிருக்கும் யந்திரத் தருகில் போய்) ஹல்லோ!—ஹல்லோ!—ஹல்லோ! — ஆம் விஸ்வம் பேசுகிறது — ஆம் — வென்ட்வொர்த்! என் ரகசியத்தை முற்றிலும் முடித்துவிட்டேன்!—ஆம்—இப்பொழுது அதைச் சொல்ல முடியாது உனக்கு — எவ்வளவு வேகமாய் ஆகாய விமானத்தில் இங்குவர முடியுமோ, அவ்வளவு வேகமாய் வந்து சேர் — உடனே! இதற்குள் என் தகப்ப

ஞர் அனுமதியைப் பெற்று உனக்குச் சொல்கிறேன் —ஏனோ?—அவருக்கு அப்படி பிரமாணம் செய்து கொடுத்திருக்கிறேன் — அவர் எப்படியும் உத்திரவு கொடுப்பார்!—ஆம்—சீக்கிரம் வா! சீக்கிரம்! ஆம்— உனக்கு மிகவும் வந்தனம் — (அதைத் திருப்பிவிட்டு) (கதவருகில் போகிறான்) இதை இப்பொழுது என் தந்தை தாயர்க்குத் தெரிவிக்கிறேன்.

(கதவைத் திறந்துகொண்டு வெளியே போகிறான்)

காட்சி முடிகிறது.

———

# இரண்டாம் அங்கம்

**இடம்.**—ஹிட்லருடைய வீட்டில் ஓர் அந்தரங்க அறை.

ஹிட்லர் கோபத்துடன் உலாவிக்கொண்டிருக்கிறான்.

ஹிம்லர் ஒருபுறம் நின்றுகொண்டிருக்கிறான்.

**இட்.** ஹிம்லர்! இந்த விஷயம் அவ்வளவு விபரீதமானதென்று நினைக்கிறாயா?

**இம்.** ஆம் தலைவரே! கொஞ்ச நாளைக்குமுன் உங்களுக்கு நான் தெரிவித்த அந்த இந்தியன், அவன் நாடிய இரகசியத்தைக் கண்டு பிடித்துவிட்டான்.

**இட்.** உனக்கு எப்படி தெரியும் அது?

**இம்.** அமெரிக்கா தேசத்து இரகசிய வேலை அதிகாரியாகிய அவனது நண்பனாகிய வென்ட்வொர்த் என்பவனுக்கு, நேற்றைத் தினம் தான் கண்டுபிடித்து விட்டதாகத் தெரிவித்தான்; இரவும் பகலும் இவர்கள் ஏதாவது பேசுவதை கவனிக்கும்படியாக, ஏற்படுத்தப்பட்ட எனது ஆள் இவர்கள் பேசியதைக் கேட்டறிந்தான்.

**இட்.** அதென்ன, அவ்வளவு அபாயகரமான ஆயுதமா?

**இம்.** நம்முடைய எதிரிகள் மாத்திரம் அதன் ரகசியத்தை அறிவார்களாயின் மூன்று தினங்களுக்குள்ளாக நமது ஜெர்மன் சைனியத்தையெல்லாம் நாசமாக்கக் கூடும்.

**இட்.** உன்னுடைய கெஸ்டப்போ,—ரகசியத் தொழிலாளர்கள்—என்ன பிரயோஜனம்? பிரிடிஷ்காரராவது அமெரிக்கர்களாவது இதை அறியுமுன் இந்த இரகசியத்தை நீ கண்டு பிடிக்க முடியாதா?

**இம்.** இதைக் கண்டு பிடித்தவன் ஒரு இந்தியன்.—அவன் இந்தியாவி லிருக்கிறான்.

**இட்.** இதன் ரகசியத்தை அவன் இதுவரையில் யாருக்காவது தெரிவித்திருக்கிறானா?

**இம்.** இன்னும் இல்லை—ஆனால் அவன் சீக்கிரம் அதைத் தெரிவிகக்ப் போகிறான் என்று எண்ணுகிறேன்.

**இட்.** அதை வேறொருவருக்கு அவன் தெரிவிக்குமுன் அவனைக் கொன்றுவிடும் மார்க்கத்தை உடனே தேடு! (அறையில் இருக்கும் டெலிபோன் மணி அடிக்கிறது) பாழாய்ப் போக!—(கேட்கும் கருவியைக் காதில் வைத்து) யார் பேசுகிறது?—ஓ! ஆம்! — ருஷ்யா போர் முனையிலிருந்தா?—சரி! அவர்களா நம்மை எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள்! உன்னுடைய துருப்புகள் என்ன செய்கிறார்கள்? — உம்—உன்னுடைய சைனிய நஷ்டம் அதிகமாக யிருக்கிறதா? இருந்தால் என்ன? பாழாய்ப்போன மனுஷா!—நீ என்ன பயங்காளியா!—இன்னும் மூன்று கோடி ராணுவம் மடிந்தாலும் பெரிதல்ல!—நீ மாஸ்கோவை யாவது உடனே பிடிக்க வேண்டும்—இல்லா விட்டால் இங்கு நீ உயிருடன் திரும்பி வரவேண்டியதில்லை! அப்படி வந்தால்....உன் கதி என்னவாகுமென்று உனக்கு நன்றாய்த் தெரியுமே!—சரிதான்! — (கேட்கும் கருவியை கீழே வைத்துவிட்டு) இதோ பார்! இம்லர்! ரஷ்யா யுத்த களத்திலிருந்து விபரீதமான சமாசாரம் வந்திருக்கிறது—நாம் ஜெயிக்க வேண்டுமென்றால், எப்படியாவது இந்த இரகசிய ஆயுதத்தை நாம் பெற வேண்டும். அதைப் பெறுவோமாயின் முன்பு, நம் எதிரிகள் நம்மை அழிப்பதைவிட்டு, நாம் அவர்களை யெல்லாம் அடியுடன் அழித்துவிடலாம். இந்த பிரிட்டிஷ்காரரையும் அமெரிக்கர்களையும் — மூன்று தினங்களுக்குள்ளாக! நீ கூறுவதுபோல் அதற்குள்ளாகவே அவர்களை அதம்செய்து விடலாம். ஜெர்மனி தோல்வி யடைந்தால், நான் இறப்பதற்கு முன் இவ்வுலக முழுவதையும் அழித்துவிட்டு, இறக்கிறேன்!—ஏனப்பா? அந்தப் பாழாய்ப்போன இந்தியன் மற்றவர்களுக்கு இந்த இரகசியத்தை வெளியிடு முன் நீ அறிய மார்க்கமில்லையா?

**இம்.** இதில் கஷ்ட மென்னவென்றால்—மதராஸ் பட்டணத் தருகில் ஓர் கிராமத்தில் வசிக்கும் இந்த இந்தியனை, நாம் முதலில் பார்க்கவேண்டு மென்பதுதான்.

இட். நான் இதற்கு மார்க்கம் சொல்கிறேன்! என் மனதில் ஆச்சரியகரமான ஓர் யோசனை தோன்றியிருக்கிறது! —கொய்ரிங் இடம் நான் கட்டளையிட்டதாகச் சொல்லி, உன் வசம், மிகவும் வேகமும் பலமும் பொருந்திய, பாம்புகளைத் தெறிக்க வல்ல ஆகாய விமானத்தை, ஒப்புவிக்கச் சொல். அதில் கைதேர்ந்த உன கெஸ்டபோ அதிகாரிகளில் ஆறு பெயரை ஏற்றி, உடனே புறப்பட்டு இந்தியாவுக்குப் போய், இந்த இந்தியனைக் கண்டு பிடித்து, எப்படியாவது சாகசம் செய்து இந்த இரகசியத்தைக் கண்டறியச் சொல்; அவனிடமிருந்து அறிந்தவுடன் அவன் அதை மற்றவர்களுக்கு அறிவிக்கா வண்ணம் உடனே பார்த்துக் கொள்ளச்சொல் —நான் கூறுவது உனக்கு அர்த்தமாகிற தல்லவா?

இம் தெரிகிறது! தலைவரே!

இட் அதிருக்கட்டும் — அநேகம் இந்தியர்கள் அவர்கள் கவர்ன்மெண்டார் மீது மிகவும் அதிர்ப்தி யடைந்திருக்கிறதாக நீ சொன்னதாக ஞாபக மிருக்கிறதே எனக்கு?

இம். ஆம் உண்மைதான்! ஆயினும் அவர்களுள் காந்தி முதற்கொண்டு, அந்த தேசத்திய பிரிடிஷ் சைன்யம் ஜெயிக்க வேண்டுமென்று கோராத ஒரு இந்தியனும் கிடையாது.

இட். ஏன்?

இம். ஏனென்றால்—அவர்கள் எல்லாம் நம்மை வெறுக்கிறார்கள்!

இட். ஹூம்! கொஞ்சம் பொறு, நான் இந்த பிரிடிஷ்காரர்களை முன்பு தோற்கடிக்கட்டும், பிறகு நான் இந்தியாவுக்குப் போய்—இந்த கருப்பு மனிதர்களை என்ன செய்யவேண்டுமென்று எனக்குத் தெரியும்.

இம். ஆனால், நான் சொன்ன இந்த இந்தியன், நம்மைவிட வெண்மையா யிருக்கிறான் — அவனுடைய புகைப் படத்தைப் பார்த்ததில்—அதை என்னுடன் கொண்டு வர மறந்தேன்—நான் உங்களுக்கு அதை நாளைக்குக் காண்பிக்கிறேன்.

**இட்.** அப்படியானல் — நம்முடைய ஆரிய சங்கேதப்படி அவன் நம்மைச் சார்ந்தவன் என்று சொல்லி, அவனை வசப்படுத்தட்டும் நம்முடைய கெஸ்டப்போ போலீஸ்! அவனிடம், அவனும் ஒரு ஆரியன், ஆகவே ஜர்மானியர்களுடைய ஆதி வம்சத்தாரும் இந்தியாவிலிருந்து வந்தவர்கள், ஆகவே அவன் ஜர்மன் கட்சியைச் சேரவேண்டுமென்று சொல்லட்டும்.

**இம்.** என்ன முடியுமோ—பார்க்கிறேன்.

**இட்.** உடனே இந்த வேலையை ஆரம்பி! நாம் ஒரு க்ஷணத்தையும் வீண் போக்கலாகாது. உன் மனிதர்களிடம் இதுவே அவர்களுக்கு நான் இட்ட கடைசி கட்டளை என்று தெரிவி.—அந்த மனிதன் மற்றவர்களுக்கு அந்த ரகசியத்தைத் தெரிவிக்குமுன் அவனைப் பிடிக்கவாவது வேண்டும் — அல்லது வான்ஸ்பீ (VonSpee) சென்ற இடத்திற்காவது அவர்கள் விரைவில் போக வேண்டும்! (டெலிபோன் மணி அடிக்கிறது) பாழாய்ப் போக! யார் அது இம்முறை? (குழாயைக் காதில் வைத்து). ஆமாம்—அவன் இங்குதான் இருக்கிறான். அவனிடம் நீ என்ன சொல்ல வேண்டும்? — யார் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு விட்டது?—வென்ட்வொர்த்! அமெரிக்காவிலிருந்து புறப்பட்டுவிட்டானும், இம்லர்!

**இம்.** ஆனல் ஒரு க்ஷணமும் தாமதிக்கலாகாது. வென்ட்வொர்த் அந்த இந்தியனைச் சந்திக்குமுன் நாம் அவனைப் பற்ற வேண்டும்!

(வெளியே ஓடுகிறான்)

காட்சி முடிகிறது.

# மூன்றாம் அங்கம்

இடம் — திருவொற்றியூரில் விஸ்வநாதத்தினுடைய புதிய வீட்டில், ஓர் அறை. விஸ்வநாதம் எழுதும் மேஜையின் எதிரில் ஓர் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஒரு தந்தியை வாசித்த வண்ணம் இருக்கிறான்.

வி. (படிக்கிறான்) "ஈஸ்வரன் கருணை!—மிகவும் சந்தோஷம்! புறப்பட்டு விட்டேன். வியாழம் வெள்ளி வந்து சேர்கிறேன்." — அப்படியானால் இன்றைக்காவது, நாளைக்காவது வந்து சேரவேண்டும்— என்ன நேர்ந்த போதிலும் இந்த சாவுகார் பிசாசின் உபத்திரவம் நீங்கி யிருப்பேன்! — அவன் கடைசியில் என்ன கொடுப்பதாய் சொன்னான்?—(வேறொரு கடிதத்தைப் பார்த்து)—ஐந்து லட்சம்!

(வெளியில் ஒரு மோடார் பெரும்நாதம் கேட்கிறது)

வி. ஏதோ கஷ்டம் நேரிடப்போகிறது! ஏதோ அபாயம் வந்திருக்கிறதென என மனதிற்குள் தோன்றுகிறது.

(ஒரு வேலையாள் வருகிறான்)

வி. யார் அது? சாவுகார் அல்லவே?

வே. இல்லிங்க—ஒருத்தர் வந்திருக்காருங்க — ரெண்டு வண்டியிலே! இந்த கார்டை கொடுக்கச் சொன்னாரு உங்ககிட்ட.

வி. ஒருத்தர் வந்திருக்கிறார்—இரண்டு வண்டியில்! (கார்டைப் படித்து) 'கில்லிங்காம், 32 சாலைத் தெரு, நியுயார்க்!—"கில்லிங்காம்! இது யார்? எனக்கு தெரியவே தெரியாதே!—ஓ! இதோ-ஏதோ பென்கிலில் கிறுக்கியிருக்கிறது—மிஸ்டர் வென்ட்வொர்த் அனுப்பினார்" —ஓ! பையா — அவரை உடனே வரச் சொல் இங்கு. (வேலையாள் போகிறான்). வென்ட்வொர்த்துக்கு என்ன? தானே வருவதாகத் தந்தி அனுப்பினாரோ— அவர் வேறொருவரையும் அனுப்பியிருக்கமாட்டாரே —இவ்விஷயத்தில்?

'கில்லிங்காம்' வருகிறார்.

கி. குட் மார்னிங்!—நான் இன்னுனென்று நானே என்னைத் தெரிவித்துக் கொள்ளவேண்டியதிருக்கிறது. நான் நியுயார்க்கிலிருந்து வந்திருக்கிறேன். தங்களுடைய சிநேகிதனை வென்ட்வொர்த்தின் நெருங்கிய தாயாதி. மிஸ்டர் விஸ்வம் — க்ஷேமந்தானே?—(அவன் கையைப்பற்றி குலுக்குகிருன்). மிஸ்டர் வென்ட்வொர்த் என்னை முன்பாக அனுப்பினுர்.

வி. ஏன்?—வென்ட்வொர்த் தானுக ஏன் வரவில்லை?

கி. அதை உமக்குக் கூறவே என்னை முன்பு அனுப்பினுர்—இங்கு நாம்—தாராளமாய்ப் பேசலாமா?

வி. தாராளமாய்.

கி. வென்ட்வொர்த்தும்—நானும்—இன்னும் இரண்டுபெயரும்—மிகுந்த வேகமாய்ச் செல்லக்கூடிய ஒரு எய்ரோபிளேனில் வந்துகொண்டு இருந்தோம்.—வரும் வழியில்—போர்ட்செய்ட் அருகில் பாழாய்ப்போன ஜெர்மன் பிளேன் எங்களை எதிர்த்தது! இந்த கேடுகெட்ட பாவிகளுக்கு நாங்கள் இங்கு வந்துகொண்டிருக்கிருேமென்று எப்படி தெரிந்ததோ அது ஈஸ்வரனுக்குத் தான் தெரியும்.—எங்கள் விமானம் சேதப்பட்டது—வென்ட்வொர்த்துக்கு — காயம்பட்டது மார்பில்—தெய்வாதீனமாய் ஹிருதயத்தில் காயம் படவில்லை. அவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்படுகிருர்.—டாக்டர் படுக்கையை விட்டு அசையக் கூடாதென்று கட்டளை யிட்டிருக்கிருர்—நீங்கள் ஒன்றும் பயப்படாதீர்கள்—ஒரு வாரத்திற்கெல்லாம் அவர் ஸ்வஸ்தமாய் விடுவார்—ஆகவே அவர் என்னை முன்பு அனுப்பினுர்—உங்களைப் பார்க்கும்படி—நீங்கள் புதிதாய்க் கண்டு பிடித்திருக்கும் இரகசியத்தைப் பற்றி—

வி. அதைப்பற்றி—அவரிடமின்றி—வேருெருவரிடமும்—தான் பேசுவதற்கில்லை—அதுவும்—

கி. பயப்படாதீர்கள்—நான் அவருடைய பந்து தாயார் பக்கம்—அமெரிக்காவில் இரகசிய ராணுவத் தொழிலைச் சேர்ந்தவன் நான் (வெளியில் தூரத்திலிருந்து ஒரு விசில் (Whistle) சப்தம் கேட்கிறது)—இதோ—

அவருடைய கடிதமும்—உங்களுக்குக் கொடுக்கும்படி சொன்னது இருக்கிறது—அதில் நீங்கள் என்னை பூரணமாய் நம்பலாமென்றிருப்பதைக் காண்பீர்கள்—இவ் விஷயத்தில் நாம் காலஹரணம் செய்வதற்கில்லை —(தன் இரு கைகளையும் தன் கோட்டின் பைகளுக்குள் நுழைத்து ஒன்றிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக்கொடுக்கிறான்—தன் இடதுகையால்; விஸ்வநாதன் அதைப் பிரிக்கிறான்)

வி. இது வென்ட்வொர்த் கையெழுத்தல்லவே!

கி. (மற்றொரு கையால், ஒரு கைத் துப்பாக்கியை திடீரென்று வெளியில் எடுத்து) தூக்கு கைகளை உயர! இல்லாவிட்டால் நான் சுடுவேன்! (விஸ்வநாதன் தன் இரு கரங்களையும் உயரத் தூக்குகிறான்) அதுதான் சரி!—இப்பொழுது நான் சொல்வதைக் கேள்—ஏதாவது கூச்சல் கீச்சல் போட்டாயோ உடனே என் துப்பாக்கியால் சுட்டு உன் மூளையைச் சிதறடிப்பேன்!

(ஹர்மன் ஆங்கில ராணுவ உடையில் வருகிறான்)

நாஜிகளின் வழக்கப்படி கில்லிங்காமை வணங்குகிறான்.

ஹ. உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டன.

கி. எல்லாம் சரியாகிவிட்டதா?

ஹ. நிரம்ப சரி.

கி. இப்பொழுது இந்த பெரிய மனிதரின் கைகளிரண்டையும் அவரிருக்கும் நாற்காலியில் சேர்த்துக் கட்டு —அவருக்கு நோகாதிருக்கும்படி!—(ஹர்மன் அப்படியே செய்கிறான்) இனி எமது கொடுக்கல் வாங்கல் வியாபாரத்தை சீக்கிரம் முடிப்போம்—இதோ கவனி —விஸ்வம்—நான் சுருக்கமாய்ச் சொல்கிறேன். ஐந்து நிமிஷத்தில் நீ கண்டுபிடித்திருக்கும் இந்த ரகசியத்தை என்னிடம் சொல்.—ஒன்றும் ஒளியாமல்—இப்படிச் செய்தால், உன் உயிரையும் காப்பாற்றுவேன்—உன்னையும் ஒரு பெரிய பணக்காரனுக்குவேன்—நீ தற்காலம் மிகவும் கடன்பட்டிருக்கிறாய், எனக்குத் தெரியும்—இந்த க்ஷணம்—இவ்விடமே, உனக்கு

லட்சம் பொன் தருகிறேன், எல்லாம் பொன் நாணய மாக !—காகித நோட்டுகளல்ல—அந்த ரகசியத்தைச் சொல்லாவிட்டால்—உன்னை உடனே சுட்டுக்கொல் வேன்—உனக்கு இரண்டு நிமிஷங்கள் கொடுக்கிறேன் —உனக்கு இஷ்டமானதைச் செய்.

வி. எனக்கு—இரண்டு—நிமிஷங்கள் வேண்டாம்.

கி. அதுதான் சரி !— சொல்லிக்கொண்டு போ !—(ஜோபியிலிருந்து ஒரு நோட் புஸ்தகத்தையும் பென்சிலையும் எடுக்கிருன்).

வி. நான் வேண்டுவதெல்லாம்—சில விஞடிகள் தான்—என்னைச் சுட்டுக்கொல் ?

கி. என்ன ! நீ எனக்கு—இதை சொல்லப்போகிருயென்றல்லவோ பார்த்தேன் !

வி. ஒருபோது மில்லை !

கி. (ஏளனமாய் நகைத்து) ஹூம் ! உனக்கு கொஞ்சம் தைரிய மிருக்கிறது !—இந்தியர்கள் முக்கியமாக தென் இந்தியாவிலுள்ளவர்களை — பயங்காளிகள் என்று சொன்னார்களே, எனக்கு !

வி. சொன்னவன் மடையன் — பொய் சொன்னான் !—உன் வேலையை சீக்கிரம் முடி.

கி. விஸ்வம்—பயித்தியக்காரஞயிராதே ! நான் சொன்ன படி செய்து தீருவேன்—முதல் முறை உன்னைக் கேட் கிறேன்—சொல்கிருயா ? மாட்டாயா ?

வி. நான் உனக்கு பதில் சொல்கிறேன். முதல் முறை, இரண்டாம் முறை, மூன்ரும் முறை ! நான் சொல்ல மாட்டேன்—சுட்டுத் தள்ளிவிடு என்னை உடனே !

கி. உம்—இருக்கட்டும் — இந்த விதத்தில் நீ வழிக்கு வர மாட்டாய் ! எங்களுடைய கெஸ்டபோ போலீஸ் உனக்கு என்ன செய்வார்கள் என்பதை நீ அறியாய் ! உன்னை நான் சுடப்போகிறதில்லை.

வி. நீ சொன்னபடி செய்கிற மனிதன் என்று சற்று முன்பாகக் கூறினையே !

கி. (தன் இடது கரத்தால் அவன் வாயில் அறைந்து) வாங்கிக்கொள் இதை! அதகப்பிரசங்கி!

வி. ஆம்—நான் வாங்கிக்கொள்ள வேண்டியது தான்—ஒரு பயங்காளி யிடமிருந்து!

கி. என்ன சொன்னுய்! (கைத் துப்பாக்கியை உயர்த்தி)

வி. சரி!—சுடு!—சீக்கிரம்!

கி. அவ்வளவு அவசரம் வேண்டாம் அப்பா! அந்த இரகசியத்தை உன்னிடமிருந்து வரவழைக்கும் விதம் எங்களுக்குத் தெரியும். ஹெறர்மன், அவன் வாயை அடைத்து அந்த மூலையில் கொண்டுபோய் வை.

வி. ஒரு நிமிஷம்—உன்னிடம் மனித சுபாவ மென்பதிருந்தால்—நான் என் தாய் தந்தையர், மனைவி, மகன் இடமிருந்து விடைபெற, எனக்கு உத்திரவு கொடு.

கி. அப்படியே செய்கிறேன் — உன் இரகசியத்தை நீ வெளியிடுவதாக எனக்கு வாக்களிப்பாயாளுல்.

வி. உம்—உன்னிச்சைப்படி செய் — நான் அவர்களைப் பார்க்க விரும்பவில்லை.

கி. ஹெறர்மன் உன் வேலையைப் பார் (ஹெறர்மன் விஸ்வநாதத்தின் வாயைத் துணியால் அடைக்க பிரயத்தனிக்கிருன்)

வி. ஒரு விஞடி — அந்த புஸ்தகத்தை என்னுடன் கொண்டுபோக உத்திரவு கொடு.

கி. அது என்ன புஸ்தகம்? — என்னை ஏதாவது மோசம் செய்யப் பார்க்காதே!

வி. அதை யெல்லாம் உனக்கும் உன் இனத்தாருக்கும் விடுகிறேன். அது எங்கள் பகவத்கீதை. நீ வருமுன் அதை நான் படித்துக்கொண்டிருந்தேன். நான் சாகுமுன் அதை முற்றிலும் படித்து முடிக்க விரும்புகிறேன்.

கி. அவ்வளவு சீக்கிரமாக நீ சாவதற்கு நாங்கள் இடங் கொடுக்க மாட்டோம், அப்பா பிள்ளையாண்டான்!—அந்த புஸ்தகத்தை நான் பார்க்கட்டும். (அந்த புஸ்த

கத்தை எடுத்துப் பார்த்து) தி—பக—வாட்—கிடா!— சரிதான்—இதை உன் ஜேபியில் போடுகிறேன்.— ஹெர்மன், அந்த நாற்காலியை விட்டு அவனை அவிழ்த்து விடு. முதலில் அவன் வாயை அடைத்து விடு—பிறகு இவனை எனக்கு முன்பாக நமது காருக்கு அழைத்துச் செல்.

(ஹெர்மன் அப்படியே செய்கிறான்
கில்லிங்காம் அவர்களைப் பின் தொடர்கிறான்)

காட்சி முடிகிறது.

# நான்காவது அங்கம்

இடம்—கடல் மூழ்கிக் கப்பலில் ஓர் அறை. ஹெர்மன் ஒரு மேஜையின் முன்பு உட்கார்ந்திருக்கிறான். ஒரு ஜெர்மன் கடல்படை உத்தியோகஸ்தன் எதிரில் நிற்கிறான்.

ஹெ. என்னுடைய ஆகாய விமானத்தைப்பற்றி கடைசியில் என்ன சமாசாரம் வந்தது?

க-உ. எங்களுக்கு அதிலிருந்து கடைசியில் கிடைத்த சமாசாரம்—"நாங்கள் எதிரிகளால் எதிர்க்கப்படுகிறோம்"—என்று ஆரம்பித்து திடீரென்று நின்றுவிட்டது—ஆகவே அது பகைவர்களால் அழிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று அனுமானிக்கவேண்டி யிருக்கிறது.

ஹெ. உம்!—இனி கால தாமதம் செய்ய முடியாது—நம்முடைய முக்கிய கைதியைப் பற்றி என்ன சமாசாரம்?

க-உ. நல்ல செய்தி யில்லை—அவனுடைய தேகம் என்ன இரும்பாலாயதோ என்னவோ தெரியவில்லை! எங்களால் ஆனமட்டும் வதைத்துப் பார்த்தோம்—கடைசியில் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட மார்க்கங்களால் கூட—மிகுந்த பாதைப்படுவதாக முகத்தில் தோன்றுகிறதே யொழிய வாயைத் திறந்து ஒரு வார்த்தையும் பேசமாட்டேன் என்கிறான்.—இந்த இந்தியர்களே ஒருமாதிரி யானவர்களாகத் தோற்றப்படுகின்றனர்!

ஹெ. சரிதான்—கொண்டுவா உள்ளே அவனை.—ஜாக்கிரதையாகக் காவலுடன்—அம்மட்டும் நமது கையை விட்டு அவன் தப்புவதற்கு இனி வழியில்லை—

(கடற்படை உத்தியோகஸ்தன் வணங்கிவிட்டு வெளியே போகிறான்)

ஹெ. என் ஆகாய விமானம் அழிந்து போனலை—நான் எப்படி திரும்பிப்போவது ஜெர்மனிக்கு—தலைவரிடம் சமாசாரம் சொல்ல.—அதுதான் கேள்வி!

கடற்படை உத்தியோகஸ்தன், கைகளிலும் கன்னங் களிலும் மிகவும் காயப்படுத்தப்பட்டிருக்கும் விஸ்வநாதனுடன் வருகிறான்.

ஹெ. வா ஐயா — விஸ்வம் — எப்படி யிருக்கிறாய் இப் பொழுது?

(கடற்படை உத்தியோகஸ்தன் போகிறான்)

வி. பரமேஸ்வரன் விட்ட—சந்தோஷ ஸ்திதியில் இருக்கி றேன்.

ஹெ. இதோ பார் விஸ்வம்—உன்னுடைய கடவுளை ஏன் எல்லாவற்றிற்கும் நடுவில் இழுத்துக்கொண்டு வருகி றாய்?—அவர் உன்னை எந்த ஸ்திதிக்குக் கொண்டு வந்திருக்கிறார் என்பதை நீதான் பார்க்கிறாயே.

வி. பார்க்கிறேன்.

ஹெ. இன்னும் அவரையே நம்புகிறாயா?

வி. ஆம்.

ஹெ. என்ன விந்தையான புத்தியுடையவன்!—இன்னும் அவர் உனக்கு உதவப்போகிறாரென்று நினைக்கி றாயா?

வி. ஆம்.

ஹெ. ஆமாம்—எப்படி உனக்கு உதவப்போகிறார்?

வி. இந்த ஹீனமான — உடலை விட்டு — ஆவியைப் பிரித்தோ—வேறு எந்த விதத்தாலோ!

ஹெ. என் கையில் ஒரு முறை பட்டபின்—வேறு விதம் ஒன்றுமில்லை—

கடற்படை உத்தியோகஸ்தன்
வேகமாய் வருகிறான்.

க-உ. நம்முடைய நீர்மூழ்கிக் கப்பலின் யந்திரம் ஏதோ கெடு தியை அடைந்திருக்கிறது!

ஹெ. என்னைத் தொந்திரவு செய்யாதே இப்பொழுது!— நான் முக்கியமான வேலையிலிருக்கிறேன் தெரிய

வில்லையா உனக்கு?—அதைப் பார்த்துக்கொள் நீயே உடனே—இல்லாவிட்டால் நான் உன்னை தண்டிப்பேன். (கடற்படை உத்தியோகஸ்தன் போகிறான்)

ஹே. இதோ பார் விஸ்வம்—என் கையில் கெட்டியாய் அகப்பட்டுக்கொண்டிருக்கிறாய் — உன் இரகசியத்தை எனக்கு நீ உடனே சொல்லவாவது வேண்டும் — இல்லாவிடின், சில நிமிஷங்களுக்குள் சமுத்திரத்தில் அதோகதியாய் மூழ்கவேண்டும்.

வி. அப்படிச் செய்தால் கொதிக்கின்ற என் உடலை அது குளிரச்செய்யும்.

ஹே. விஸ்வா, உங்களை யாளுகின்ற வேறொரு தேசத்தார்களுக்காக நீ இவ்வளவு கஷ்டமெல்லாம் ஏன் அனுபவிக்க வேண்டும்? அதை நான் அறிய விரும்புகிறேன்.

வி. ஏனென்றால்—எங்கள் மதத்தின்படி எங்களை ஆள்பவர்களை நாங்கள் தெய்வமாகக் கருதும்படி போதிக்கிறது.

ஹே. அந்த துரைத்தனம்தான் உனக்கு இத்தனை கஷ்டத்தையும் கொண்டு வந்து விட்டதே?

வி. இல்லை! அவர்கள் என்னை ஒரு கஷ்டத்திற்கும் ஆளாக்கவில்லை,

ஹே. பிறகு—யார் செய்தது?

வி. என் கர்மம்!

ஹே. உன் கர்மம்? என்ன ஆகாத்தியக்காரர்கள் இந்த இந்தியர்கள்! — உங்களுக்கு நேரிடுவதற்கெல்லாம் சமாதானம் சொல்ல இந்த இரண்டு பதங்களைக் கற்றுக்கொண்டிருக்கிறீர்கள்!—ஸ்வாமி!—கர்மா!

வி. ஆமாம்.

ஹே. சரி! உன் விஷயத்தை நீ விடப்போகிறதில்லை!—ஆனால் உன்னால் எவ்வளவு கோரமான சாவைப்பற்றி எண்ண முடியுமோ அப்படிப்பட்ட மரணத்திற்கு உள்ளாக ஆயத்தப்படு! நீ நேற்றிரவுபட்டது எல்லாம் அதன் முன்பாக ஒன்றுமில்லாததாம்!

வி. (கண்களை மூடி ஏதோ ஜபித்துவிட்டு) ஆயத்தமா யிருக்கிறேன்—சித்தமா யிருக்கிறேன்—தயவு செய்து உன் வேலையை சீக்கிரம் முடி.

ஹெ. சற்று முன்பாக என்ன முணுமுணுத்தாய்?

வி. என் தாய் தந்தையர்களிடமிருந்தும் என் மனைவி மகனிட மிருந்தும், மனதில் விடைபெற்றுக்கொண்டேன்.

ஹெ. ஓ! — தெரிகிறது! — அவர்களை இங்கு நேராக வரவழைத்து, நீ அவர்களிட. மிருந்து விடைபெற்றுக் கொள்ளச் செய்வேனுயின் — எனக்கென்ன கொடுப்பாய்?

வி. நீ ஒரு மனிதன் என்கிற நன்கு மதிப்பை உனக்குக் கொடுப்பேன்.

ஹெ. உம்! — பார்க்கலாம்! — (தன் எதிரிலிருக்கும் சிறு மணியை அடிக்கிறுன்)

மாலுமி ஒருவன் வந்து நிற்கிறுன்.

ஹெ. அந்த இந்தியர்களை யெல்லாம் — ஜாக்கிரதையாக அழைத்து வா—தக்க காவலுடன்.

வி. நீ—அவர்களை—இங்கு—கொண்டுவந்திருக்கிறுயா?

ஹெ. ஆம்—உன்பொருட்டு.

வி. என்—பொருட்டாகவா?

ஹெ. ஆம்—காரணத்தை நீயே காண்பாய்.

நான்கு கப்பல் படை வீரர்கள் அகஸ்தீஸ்வர முதலியார், அவரது மனைவி, பத்மா, கண்ணன், இவர்களைக் காவலுடன் அழைத்துக்கொண்டு வருகிறுர்கள். விஸ்வநாதன் காயங்களைக் கண்டு அவர்கள் நால்வரும் திடுக்கிட்டு வருந்துகின்றனர்.

க. அப்பா! அப்பா!

ப. நாதா!

அ. பையா!

அ-அ. கண்ணே! கண்ணே!

ஹே. நிறுத்துங்கள் இந்த அழுகையெல்லாம்! — இதோ பார் விஸ்வம் — உங்களுடைய அழுகையெல்லாம் கேட்க எனக்குக் காலமில்லை — இதுதான் நான் உனக்குக் கூறப்போகிற கடைசி வார்த்தை. — உன் இரகசியத்தை உடனே எனக்கு நீ சொல்லவாவது வேண்டும்—

வி. மாட்டேன்!

ஹே. பொறு அடா அப்பா பொறு! நான் சொல்வதை முற்றிலும் கேள்—பிறகு நீயே வேறு பாட்டைப் பாடுவாய் — நீ எனக்குச் சொல்வாயானால் உங்கள் எல்லோரையும் நான் விடுவித்து விடுகிறேன். உங்கள் ஊருக்கு அழைத்துக்கொண்டு போய்விடுகிறேன். உன்னை மிகுந்த செல்வவானாக்குகிறேன் — பிறகு உங்கள் தேசத்தை நாங்கள் ஜெயித்தபின்—

வி. அது உங்களால் ஒருகாலும் முடியாது!

ஹே. அடேய்! நீ இனி குறுக்காக ஏதாவது ஒரு வார்த்தை பேசினாலும் — உன்னை உடனே சுட்டு விடுவேன்.

வி. அப்படியே செய், தயவு செய்து.

ஹே. பிள்ளையாண்டான்! அதை விட மேலானதொன்றை என்னிடம் வைத்திருக்கிறேன்—உன்னை தண்டிக்க! உன் இரகசியத்தை உடனே வெளியிடாவிட்டால்— நான் என்ன செய்வேன் என்பதைக்கேள்—உன் பையனை சமுத்திரத்தில் உன் கண் முன்பாகத் தூக்கிப் போட்டுவிடுவேன்—

வி. ஈசனே!

ஹே. உன் மனைவி உன் எதிராகத் தன் கற்பினை இழப்பாள்—

வி. அப்பனே! அப்பா!

ஹே. நீ உன் தாய் தந்தையர்களை தெய்வமாகப் பூசிக்கிறாயாமே—அந்த தாய் தந்தையர்களை—உன் கண் முன் துண்டம் துண்டமாக வெட்டி எறிவேன்! — தெரிகிறதா?

வி. (தன் கண்களை மூடிக்கொள்கிறான், அவன் உடல் நடுங்குகிறது) கருணைக் கடவுளே !

ஹொ. இவற்றை யெல்லாம் நீ கண்ணாரப் பார்க்கவேண்டும் ! —நீ உன் கண்களை மூடிக்கொள்ளாவண்ணம் செய்கிறேன்—அடே, வில்லியம்—இவன் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொள் — இதோ உன் இரப்பைகளை கத்தரித்து விடுகிறேன் !—விஸ்வம்—உன் கண்களைத் திறந்து—எனக்கு பதில் சொல்! நான் கூறிய இரண்டில்—நீ விரும்புவதென்ன ?

வி. (மெல்ல கஷ்டத்துடன் கண்களைத் திறந்து) அப்பா! —அம்மா ! — நான் எதையும் பொறுப்பேன் ! உங்களிருவரையும்—துண்டமாக்குவதைக் கண்டு சகியேன் —அப்பா,—எனக்கு உத்திரவு கொடுங்கள்—

அ. பொறு! பையா! நீ என் மகன் என்பதை மறந்து பேசுகிறாய் போலும் ! நீ எனக்கு வாக்களித்ததை மறவாதே !

வி. (தன் துயரத்தை அடக்கிக்கொண்டு) இல்லை — மறவேன்.

ஹொ. ஆ ! அதுதான் சரி ! — நீ வழிக்கு வருவாயென்று எனக்கு தெரியும் !—சரி—சீக்கிரம் சொல்—காலஹரணம் செய்வதற்கில்லை—

வி. (மெல்லிய குரலுடன்) நான் மாட்டேன்.

ஹொ. என்ன சொன்னாய் ?

வி. (உரக்க) நான் சொல்ல மாட்டேன்—உன்னிச்சையை நடத்து—மனித உருவம் கொண்ட பிசாசே !

ஹொ. இதற்கெல்லாம் பழிவாங்கி விடுகிறேன் ! — அடே கிழவா ! பிடிவாதக்காரனை உன்பிள்ளை ஏதோ உன் வார்த்தையைக் கேட்பான் போலிருக்கிறது — நான் குறிப்பிட்ட இரண்டு மார்க்கங்களையும் நீ கேட்டாயல்லவா ? — மடையனை உன் பையனுக்கு புத்தி சொல்—நான் கொடுக்கும் இந்த கடைசி சமயத்தை கைவிட வேண்டாமென்று சொல்—

கடற்படை உத்தியோகஸ்தன்
விரைந்து வருகிறான்.

க-உ. ஹெர்! ஹெர்! (சார்! சார்!) ரேடியோ உத்தியோகஸ்தர், நமது கப்பலுக்கருகில் எதிரிகளுடைய கடல் மூழ்கிக் கப்பல் நெருங்குகிற சப்தம் கேட்கிறதாகச் சொல்கிறார்!

ஹெ. சீச்சீ! எதிரிகளுடைய கடல் மூழ்கிக் கப்பல் ஒன்றும் இங்கில்லை! — நான் முக்கியமான வேலையிலிருக்கிறேன்-இப்பொழுது யாராவது எனக்குக் குறுக்காக வந்தால் அவர்களை உடனே சுட்டுவிடுவேன்!

(கடற்படை உத்தியோகஸ்தன் போகிறான்)

அ. ஆம் ஐயா — என் பிள்ளைக்கு நான் புத்தி சொல்கிறேன்.

ஹெ. அதுதான் சரி! கிழவனாகிய உனக்கு கொஞ்சம் புத்தியிருக்கிறது.

அ. (ஒரு மாலுமி விஸ்வத்தை யருகில் அழைத்துக்கொண்டு போய்விட) அப்பா! விஸ்வம்! உனக்கு நான் கூறும் என் கடைசி வார்த்தைகளைக் கேள்—கேவலம் இந்த உடல்களுக்காக ஒன்றையும் கருதாதே! இவைகளெல்லாம் என்றைக்காவது ஒரு நாள் அழியப் போகின்றவை! — என்றும் அழியாததான — உன் ஆன்மாவைக் காப்பாற்று! உன்னுடைய தாயார், உன் மனைவி, உன் மகன் இவர்களுடைய மனதை நான் திடப்படுத்தி விட்டேன்.—இந்த - பெரிய மனிதரிடம்—ஒன்றையும் சொல்லாதே!

ஹெ. ஓ!—இதுதானா நீ கூறும் புத்தி!—இந்த இந்தியர்கள் ஒருமாதிரியானவர்கள்! (வெளியில் பெரிய சப்தம் கேட்கிறது)—ஹா! வெளியில் ஏதோ அபாயம் நேரிட்டிருக்கிறது! என் தலைவருக்கு நான் செய்யவேண்டிய கடமையைச் சீக்கிரம் செய்துமுடிக்கிறேன்—விஸ்வம்! 10 விநாடி உனக்கு கொடுக்கிறேன். அதற்குள்ளாக நீ இணங்காவிட்டால், நான் சொன்னபடி பழிவாங்குவேன். (மாலுமிகளை நோக்கி) பசங்களா! தயாராக இருங்கள்! (தன் கடியாரத்தை எடுத்து கணக்கிடுகிறான்) ஒன்று — இரண்டு — மூன்று — நான்கு — (வெளியில் துப்பாக்கி சுடுகிற சப்தம்) அந்த அறை

யின் வெளிக் கதவு உடைக்கப்படுகிறது) ஓ! அவர்கள் வந்து விட்டார்கள்! — பாழாய்ப் போக! — உன்னை முதலில் சுட்டுவிட்டு நான் சாகிறேன் (தன் கைத் துப்பாக்கியை உயர்த்துகிருன்)

(வென்ட்வொர்த் ஐந்தாறு அமெரிக்க சப்பல் வீரர்களுடன் விரைந்து வருகிருன். ஹெர்மன் கையிலிருந்த துப்பாக்கியை தட்டி வீழ்த்துகிருன்)

வெ. எல்லோரும் கைகளைத் தூக்குங்கள்! (ஜர்மானியரெல்லாம் அப்படியே செய்கின்றனர்) ஈசன் கருணை! அப்பட்டும் சமயத்தில் வந்தேன்!

(விஸ்வம், அவனது தாய்த்தந்தையர், மனைவி, பிள்ளை, ஜெகதீசன் கருணை! என்று சொல்லி வணங்குகின்றனர்)

வெ. பசங்களா, இந்தப் பாழாய்ப்போன ஜர்மானியர்களையெல்லாம் பிடித்துக்கொண்டு போய் காவலிலிருத்துங்கள்.—ஜாக்கிரதையாக!—ஓ! ஹெர்மன் — நீயா இங்கு வந்திருக்கிருய்!—இவனை மாத்திரம் இங்கு சற்று வைத்திருங்கள் — ஒரு நிமிஷம்! (ஹெர்மன் தவிர மற்றவர்களை யெல்லாம் படைவீரர்கள் அழைத்துச்செல்கின்றனர்). நான் நினைத்தேன் அப்பொழுதே!—கொஞ்சம் பொறு!—(விஸ்வநாதனை அவன் பந்தங்களினின்றும் விடுவித்து, அவனது கோர காயப்படுத்தப்பட்டிருக்கும் உடலைப் பார்த்து) ஜகதீசனே! —என்ன கோரம்! ராட்க்ஷஸப் பிசாசே! ஹெர்மன்! இதற்கெல்லாம் பத்து மடங்கு நான் பழி வாங்குகிறேன்!

வி. வென்ட்வொர்த்!—நான் உனக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்!

அ. ஐயா, நாங்கள் எல்லாம் உம்மை மனசாற வாழ்த்துகிறோம்!—என் பிள்ளையைக் காப்பாற்றியதற்காக!

வி. இவர்தான் என் தகப்பனர்—இவர்கள் தாயார்—இது என் மனைவி—இவன் என் பையன்.

வெ. உன் வீட்டிற்குப் போய், நான் அங்கு ஒருவருமில்லாதிருப்பதைக் கண்டபோது இந்தப் பிசாசு உங்கள்

எல்லோரையும் கைதிகளாகப் பிடித்துக்கொண்டு போயிருக்க வேண்டுமென்று எண்ணினேன். இது இந்தப் பிசாசின் பழைய வழக்கம்! — இவனை இப் பொழுதே சுட்டுக்கொன்று விடலாமா என்று பார்க் கிறேன்!

வி. வென்ட்வொர்த்! உன்னிடம் ஒரு வரம் கேட்கிறேன் நான்.

வெ. என்ன அது?

வி. இந்த — மனிதனை — சுடாதே — யுத்தத்தில் கைப்பற் றிய கைதியாகப் பாவிப்பாய்.

அ. அதுதான் எனது வேண்டுகோளும் ஐயா.

ஹெ. இந்த இந்தியர்களெல்லாம்—ஒரு மாதிரியானவர்களே!

வெ. ஹெர்மன்—அந்த அபிப்பிராயத்தில் நானும் உன்னு டன் கலந்து கொள்கிறேன். அப்பா—விஸ்வநாத! இந்த ஜெர்மன் சைத்தானுக்கு உன் ரகசியத்தை நீ வெளியிடவில்லையே?

வி. இல்லை! நான் வெளியிடுவேனென்று நீ நினைத்தாயா?

வெ. இல்லை! யமவேதனை செய்யும் இவனிடமிருக்கும் கருவி களைக்கொண்டு அவன் உன்னைப் பிராண ஹிம்சை செய்து எங்கு அதை அறிந்தானோ என்று பயந்தேன். அந்த குரூரமான இம்சைகளைப்பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன். ஸ்வாமியின் கருணையினால் இப் பாழும் ராக்ஷஸனிடமிருந்து நீ தப்பினாய்—உன் இரகசி யத்தை வெளியிடாமல்! ஆயினும், விஸ்வம் — உன் ரகசியத்தை உலகத்தவர்க்கு நாம் வெளியிடவேண்டிய நிமித்தியமே இராதென்று நினைக்கிறேன்—ரூஸ்வெ ல்ட், ஜெர்மனிமீது யுத்தம் தொடங்கிவிட்டார்!

(ஹெர்மன் தவிர மற்றவர்கள்) ஈசன் கருணை! இனி இந்த யுத்தம் சீக்கிரம் முடிந்து போகும்.

வி. நமது பட்சம் சீக்கிரம்—ஜெயமுண்டாகுமாக! ஸ்வாமி யின் கருணையினால்!

காட்சி முடிகிறது.

**நாடகம் முற்றிற்று.**

M.S. 16. C. 500—7-3-47.